MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. குரோதன ஸ்ரீ சித்திரைமீ பகுதி ச.
VOL. 2. APRIL & MAY 1925. No. 4.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

காரப்பங்காடு,
உபயவேதாந்த வித்வான் ஸ்ரீ சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.

[69-ம் பக்கத் தொடர்ச்சி.]

இப்படி அநேக ப்ரமாணங்களால் உபாஸ்ய குணங்களே அநுபாவ்யங்களென்றறியத்தகும். இப்படிச் சொல்லும்பக்ஷத்தில், "ஸர்வம் ஹ: பச்யதிஸர்வ மாப்நோதி ஸர்வச:" என்கிற சுருதியில் சேதனன் முக்திதெசையில் ஸர்வ குணங்களையும் ஸாக்ஷாத்கரிக்கிறான் என்றும், அநுபவிக்கிறானென்றும் சொல்லுகிறபடியால் இது கூடும்படி யெங்ஙனே யென்னில், இந்த ஸர்வசப்தம் "ஸர்வேப்யோ தர்ச பூர்ண மாஸேள" என்னுமாப்போலே உபாஸ்யகுண ஸமுதாய பரமாம். அல்லது ஸர்வவித்யாநுயாயியான அநந்தத்வத்தில் ஸாமான்ய ரூபேண ஸர்வகுணங்களும் விஷயமாகையால் ஸர்வகுணங்களும் உபாஸ்யங்களாயும் அநுபாவ்யங்களாயு மிருக்கலாம். அங்ஙனமன்றிக்கே, எந்த உபாஸனத்தில் எந்த குணங்கள் ப்ரகாரங்களாயும் விசேஷ்யங்களாயுமிருக்கும் அந்த குணங்கள் உபாஸந பலமான அநுபவதெசையில் ப்ரகாரங்களாயும் விசேஷ்யங்களாயு மிருக்கும், என்றும் சொல்லலாம். இந்த விஷயம் வேதாந்த தீபத்தில், "ஏகஆத்மநா சரீரே பாவாத்" என்கிற ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில், "அந்யதா ப்ராப்ய உபாஸ்யயோ: ப்ரகாரபேதாத் யதாக்ருது ரஸ்மிந்நிதி விருத்யதே" என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், அநந்தகெருட விஷ்வக்ஸேநாதிகளுக்கு வ்யவஸ்திதங் களாயுள்ள கைங்கர்யங்களில் மற்ற நித்யர்களுக்கும் முக்தர்களுக்கும் ஸகல கைங்கர்யங்களும் செய்ய யோக்யதை யிருப்பதால் அதிகார மிருந்தபோதிலும் பகவத் ஸங்கல்ப விசேஷத்தாலே ருசியில்லாமை யிருந்தபோதிலும், எல்லாருக்கும் ஸ்வாமியான பகவத்விஷயத்தில் அந்தந்த அதிகாரிகளால் செய்யப்படும் கைங்கர்யங்களாலுண்டான பகவந்முகோல்லாஸாநுபவ ஜனிதாநந்தம் ஐகரஸ்யத்தாலே எல்லா ருக்கும் ஸமமாயிருப்பதால் ஆநந்தஸாம்யம் ஏற்படுவதுபோலே அநு பவ விஷயத்திலும் அந்தந்த குணவிசிஷ்ட ப்ருஹ்மோபாஸந ஜந்ய பகவத் ஸங்கல்பத்தாலே அந்தந்த குணவிசிஷ்ட ப்ருஹ்மாநுபவம் ஏற்பட்டாலும் கீழ் நிரூபித்தபடி பல தாரதம்யம் இராது.

அநுபாவ்யகுணங்கள் ப்ரத்யேகம் அபரி:சிந்நங்களாகையாலே மற்ற குணங்களில் நெஞ்சு செல்ல ப்ரஸக்தியில்லாமையால், உபாஸ்ய குணங்களே அநுபாவ்யங்களாகலாம். ஆதலால் ஸர்வஜ்ஞதைக்கும் குறைவில்லை. இப்படியான ப்ரகாரத்தாலேதான் பெரியாழ்வார் முகப்பில் ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களில் திருவுள்ளம் செல்ல, ஜ்ஞான சக்திகளில் அறிவு செல்லாது மங்களாசாஸநத்தில் ப்ரவர்த் தித் திருப்பதாலும், அப்படியே நித்யவிபூதியில் திருவநந்தாழ்வான், "ஆங்காரவார மதுகேட் டழலுமிழும்" என்கிற பாட்டின்படி ஈசுவர னுடைய ஜ்ஞான சக்திகளில் அறிவு செல்லாமல் அஸ்தாநே பயசங் கையைப் பண்ணுகிறுரென்று சொல்லப்பட்டிருப்பதாலும், இதை அநுஸரித்தே பட்டரும், "ஸ்நேஹா தஸ்தாந ரக்ஷா வ்யஸநி பிரபயம் சங்கசக்ராபிமுக்யை:" என்று அருளிச்செய்திருப்பதாலும், அந்தந்த வித்யைகளில் உபாஸ்யங்களாக ஏற்பட்ட குணங்களே அநுபாவ்யம் என்னுமிது உபபன்னமாம்.

ஆனல், தேசிகன் "உபாஸித குணதேர்யா ப்ராப்தாவப்யபஹி ஷ்க்ரியா ஸா தத்க்ருது நயக்ராஹ்யா நாகாராந்தர வர்ஜநம்" என்று அருளிச்செய்திருப்பது கீழ் நிரூபித்தபடி ஸாமாந்யரூபமாகவாவது, ப்ரதி ஸ்வீகார ரூபமாகவாவது எல்லா குணங்களும் அநுபாவ்யங் களாயிருப்பதால் விரோதமில்லை.

இப்படியிருந்துள்ள பக்தி ஈசுவரனுக்கு அத்யந்த பரதந்த்ர மான ஸ்வரூபத்துக்கு விருத்தையன்று. (ஆகையால் ஜ்ஞானமுள்ள வர்களுக்கும் அரிதிலடையத்தக்க பக்தியுள்ளவர்களுக்கும் ப்ரபத்தி யில் அதிகாரம் உண்டாகத் தடையில்லை.) ஈசுவரனுக்கு அத்தியந்த பரதந்த்ரமா யிருக்கையாவது "யஸ்யாத்மா சரீரம்" என்கிற சுருதிப்ர காரம் சேதநஸ்வரூபம் ஈசுவரனுக்கு சரீரமாகையால் அந்த சரீர ரக்ஷணம் சரீரியான ஈசுவரனுக்கே ப்ராப்தமா யிருக்கையாலே ஸ்வ ரக்ஷணே ஸ்வாந்வயஸாபேக்ஷகமான உபாயாநுஷ்டானத்தில், ப்ராப்தி யில்லாமை. அப்படியன்றிக்கே கேவல பரதந்த்ரமாயிருக்கையாக வைத்து அவன் விதித்த உபாயத்தை அவன் கொடுத்த கர்த்ருத்வ சக்தியைக்கொண்டு அநுஷ்டிக்கை எனினுமாம்.

இவற்றுள், கீழ் நிரூபித்த அத்யந்த பாரதந்த்ரியமே சேதன னுக்கு நிஷ்க்ருஷ்ட ஸ்வரூபம். இந்த விஷயத்தைத் திருக்குரு கைப்பிரான்பிள்ளான், "தன்னாலவரும் நன்மை விலைப்பால்போலே; அவனாலவரும் நன்மை முலைப்பால்போலே" என்று அருளிச்செய் திருக்கிறார். இங்ஙனமன்றிக்கே ஸ்வதந்த்ரராய்க்கொண்டு செய்யும் உபாயாந்தரங்களை "மதிராபிந்து மிசிரமான சாதகும்ப மய கும்ப கேத தீர்த்த ஸலிலம்போலே அஹங்கார மிசிரமான உபாயாந்தரம்" என்று தியாஜ்யகோடியில் அருளிச்செய்திருக்கிறார். உபாயாந்தரநிஷ்ட னுக்கு உபாயாந்தரப்ரவ்ருத்தி பராதீந கர்த்ருத்வ ஜ்ஞானமடியாக வே வந்திருப்பதால் அஹங்கார மிசிரமான என்கிற இடத்தில், ஆனால் என்று யத்யர்த்தமாகச் சொல்வது பொருந்தாது.

இந்த அத்யந்த பாரதந்த்ரியம் திருமந்த்ரத்தில் நம:சப்தத்தால் ஏற்படுகிற அநந்ய சரணத்வரூபம். அந்த அநந்ய சரணத்வமும் கீழ் நிரூபித்தபடி உபாயாந்தராநுஷ்டாநத்துக்கு யோக்யதையில்லாமை. இப்படியிருந்துள்ள அநந்ய சரணத்வத்தை ப்ரபத்திக்கு அதிகார மாக, "அநந்ய சரணத்வாதே: அதிகாரஸ்ய ஸித்தயே தாரஸ்ய நமஸ: சோபேள ஸாரேள தேசிகதர்சிதேள" என்று தேசிகன் அருளிச் செய்தார்.

இந்த அர்த்தத்தை நம்மாழ்வாரும் பெரிய திருவந்தாதியில் "நெறிகாட்டிநீக்குதியோ நின்பால்கருமா, முறிமேனிகாட்டுதியோ" என்றருளிச் செய்தார். இதன் அர்த்தம், நளன் தமயந்திக்கு வழி காட்டினாற்போல் உபாயாந்தரங்களைக்காட்டி உன்னைவிட்டு நீங்கும் படி செய்கிறாயோ? அல்லது உன்னுடைய திருமேனியை நீயே நான் காணும்படி செய்கிறாயோ? என்பது. "யமேவைஷ விவ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்று சுருதியிலும் வ்யக்தமாகச் சொல்லப்பட்டது. இந்த சுருதி ஈசுவர னுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு ப்ரமாணம் என்பது ஸுஸ் பஷ்டம். "உபபத்தேச்ச" என்கிற ஸூத்ர வ்யாக்யாநாவஸரத் தில் பாஷ்யகாரர், "யமேவைஷ விவ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம்ஸ்வாம்," என்றும், "அநந்ய உபாயத்வ ச்ர வணாத்" என்றும் அருளிச்செய்திருக்கிறார். திருமந்த்ரத்தில் இருக் கும் நம: சப்தத்திற்கு அஹிர்ப்புத்ந்ய ஸம்ஹிதையில், "பாதோ நகார உத்திஷ்ட:" என்கிற சுலோகத்தாலே, ஈசுவரனே உபாய மென்று வ்யக்தமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியே ப்ரபத்திக்கு அதிகாரிகளை விதிக்கிற "இதம்சரண மஜ்ஞாநாம்" என்கிற சுலோகத்தில் "இதமேவ விஜாநதாம்" என்று விஜாநத் சப்தத்தாலே ஈசுவரனுக்கு அத்யந்த பரதந்த்ரம் சேதன ஸ்வரூபம் என்கிற ஜ்ஞானமுடையவனுக்கு என்று அர்த்தம் விவ க்ஷிதமாகையால், பாரதந்த்ரிய ரூப ஸ்வரூப ஜ்ஞானமுடையவர் களுக்கு ப்ரபத்தியில் அதிகாரம் என்று ஏற்படுகிறது. ஆனால் "விஜா நதாம்" என்கிற இடத்தில் உபாயாந்தர விஷயத்தில் ஜ்ஞானவான் களாயிருந்தும் அதை அநுஷ்டிக்க சக்தியில்லாதவர்கள் என்று அர்த் தம் சொல்லவேணும். அப்படி அர்த்தத்தை விவக்ஷிக்காமலிருந் தால் விசேஷ ஜ்ஞானமுள்ள வ்யாஸாதிகள் பக்தியோக நிஷ்டர்களா கவே யிருப்பதால் அந்த அர்த்தம் அநுபபந்நமாகும் என்னில், 'விஜா நதாம்' என்கிற இடத்தில் அசக்தியைச் சொல்லும்பக்ஷத்தில் அது லக்ஷ்யார்த்தமாகும். வாச்யார்த்தம் உபபந்நமாமிடத்தில் லக்ஷணை கூடாதாகையால் அந்த லக்ஷ்யார்த்தம் அநுபபந்நமாம். வ்யாஸாதி கள் அதிகாரிபுருஷர்களாகையால் அந்த அதிகாராரம்பக ப்ராரப்த

கர்மாவினுடைய ப்ராபல்யத்தாலே ப்ரபத்தியி லிழிந்தார்களில்லை. ஆதலால் ப்ரபத்யுபதேசத்துக்கு உபயுக்தமான ஜ்ஞாநாதிக்யம் இருந்தபோதிலும், அநுஷ்டாநௌபயிகமான ஜ்ஞானபூர்த்தி இல்லையென்பதை அவசியம் அங்கீகரிக்கவேணும். அங்ஙனமன்றிக்கே பக்த்யாத்யநுஷ்டான ஜ்ஞானசக்தி பரிபூர்ணர்களான அர்ஜுநன் நாதமுனிகள்போல்வார்கள் ப்ரபத்தியை அநுஷ்டிக்க ப்ரஸக்தியில்லை.

ஆனால் விளம்பாக்ஷமதையாலே ப்ரபத்தியில் இழிந்தார்களோவென்னில் அவதார ரஹஸ்ய ஜ்ஞாநாங்க பக்தியோகாநுஷ்டானத்தால், அந்த சரீராவஸாநத்திலேயே "த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந" என்கிற ப்ரமாணத்தின்படி பலம் ஏற்படுகிறபடியால் ப்ரபத்தியில் இழிய ப்ரஸக்தியில்லை. ஆனால் அசக்தர்களுக்கு அதிகாரம் இந்த சுலோகத்தில் எந்த பதத்தால் ஏற்படுகிறதென்னில், "இதம் சரண மஜ்ஞாநாம்" என்கிறவிடத்தில் "அவித்யாத:" என்கிற பட்டர்ஸ்ரீஸூக்தியின்படி வித்யாபாவவான்களைச் சொல்லுகையாலே "த்வே வித்யே விதிதவ்யே" என்கிற சுருதியின்படி சாஸ்த்ர ஜந்யஜ்ஞானத்தையும், பக்திரூபாபந்ந ஜ்ஞானத்தையும் வித்யாசப்தம் சொல்லுமாகையாலே அசக்தியாலும் சாஸ்த்ர பர்யுதாஸத்தாலும் ஏற்படுகிற வித்யாபாவத்தைச் சொல்லுகிறபடியால், சக்தியாலேயே இந்த அஜ்ஞபதமானது அசக்தர்களையும் சாஸ்த்ரபர்யுதஸ்தர்களையும் சொல்லுமாகையாலும், "விஜாநதாம்" என்கிற இடத்தில் லாக்ஷணிகமாக அசக்தியைச் சொல்லுமதிற்காட்டில் இவ்விடத்தில் அசக்தியைச் சொல்லுவதே ஸ்வரஸமாகையாலும், விஜாநதாமென்கிற பதம் அத்யந்த பாரதந்த்ரியஜ்ஞானமுடையவர்களையே சொல்லுவதென்பது உசிதம். இந்த சுலோகத்துக்கு வ்யாக்யானரூபமாக நடாதூரம்மாள் அருளிச்செய்த, "ஸத்ருசோபாய வைதுர்யம் ஸாக்ஷாத் பகவதோ விதந்,ஸர்வஜ்ஞ: சரணம் யாதி யோகமார்க்க பராங்முக: என்கிற சுலோகத்தில், விஜாநதாம் என்கிற பதத்திற்கு அர்த்தமாக, பகவானுடைய ஸத்ருசோபாய வைதுர்யத்தை அறிந்த ஸர்வஜ்ஞனா யிருக்கிறவன் யோகமார்க்கத்தில் பராங்முகனாய்க் கொண்டு ஈசுவரனையே சரணமாக அடைகிறானென்று திருவுள்ளம் பற்றியபடியானால், யோகமார்க்க பராங்முக:" என்று சொல்லுகை

யாலே பக்த்யநுஷ்டானத்தில் சக்தியிருக்கச் செய்தேயும் அந்த அநுஷ்டானத்தில் அநாதரம் தோற்றுகையாலும், சத்ருசோபாய வைதுர்யமென்கிற விடத்தில், ஈசுவரனுக்கு சத்ருசமான உபாய மில்லை; ஈசுவரனே உபாயம்; அந்த உபாய ஸ்வீகாரத்தைத் தவிர வேறு உபாயத்தை அநுஷ்டிக்கக் கடவனல்லன் என்று அர்த்தம் ஏற்படுவதால் "விஜாநதாம்" என்கிற பதமானது ஸ்வரூப விருத்தத்வ ஜ்ஞாநமுடையவர்களையே சொல்லுகிறது.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவதத்வதிவாகரம்.

[64ம் பக்கத் தொடர்ச்சி]

சம— ஸ்வாமி! "சொல்லுமவிடு சுருதியாம்" என்று முன்னருளிச்செய்தபடி தேவரீர் விநோதமாகச் சொல்லுவதும் அடியேனுக்கு வேதப்ரமாணந்தான். அடியேன் மந்தமதி. குருவியின் தலையில் பனங்காயை வைப்பதுபோல "நீயே கற்றுக்கொள்" என்று பாரத்தைச் சுமத்துவது நியாயமா? தத்வ விஷயங்களைப் போதிப்பிக்கின்ற நூல்களைத் தானே கற்றுக்கொண்டால் பலிக்குமா? உபதேசவாயிலாக வராத வித்யை பலிக்காதென்று கேள்விப்பட்டிருக்கிறேனே. இது நிற்க, முன்காலத்தில் சிஷ்யர்கள், ஆசார்யன்வாசலில் துவண்டு அவருக்குரிய குற்றேவல்களை வெறுப்பின்றிப் பல்லாண்டுகள்செய்து உபதேசங்களைக் கேட்டிருக்கிறார்களே. புஸ்தகத்தைத் தானேபார்த்துத்தெரிந்துகொள்வது உசிதமாயிருக்குமாகில் அவர்கள் அவ்வாறு கஷ்டப்படுவார்களா? ஆதலால் உபதேசத்தால் வராத வித்யை பலிக்காதென்பது திண்ணம். இனிமேலும் அடியேனைப் பரீக்ஷிக்காது முற்கூறியவற்றை விளக்கியருளவேண்டும்.

சுகு— "தத்வார்த்தங்களைத் தெரிவிக்கின்ற நூல்களைத் தான் தோன்றியாகப் பார்க்கலாகாது" என்று நீ கூறியதற்கு மிகவும் மகிழ்வடைகிறேன். நிற்க, நீ இங்ஙனங்கூறிய தற்குப் பொருத்தமான சில விருத்தாந்தங்கூறுகிறேன்; கேட்பாயாக. வைத்தியசாஸ்திரத்தில் "ஜ்வரஸ்ய குரு லங்கநம்" என்றும் "லங்கனம் பரமௌஷதம்" என்றும் சொல்லப்பட்டன. இவற்றை ஒருவன் தான்தோன்றி யாகப்பார்த்து, லங்கனம் என்பதற்குத் தாண்டுதலெனப் பொருள்கொண்டு, தனக்கு ஜ்வரம் நேர்ந்தகாலத்தில் ஒரு பெரிய திண்ணையிலிருந்து மற்றோர் திண்ணையில் தாண்டினன். அதனால் அவனுக்கு ஜ்வரம் அதிகரித்து விட்டது. அப்பொழுது இவனுக்கு நேர்ந்திருக்கும் ஜ்வரத்தைப் போக்கிச் சுகப்படுத்துவதற்கு ஒரு வைத் யர் வந்தார். இவன் அவரைக்குறித்து 'இகழ்ந்துபேசிய தோடு வைத்யசாஸ்திரத்தையும் இகழ்ந்தான். வைத்யர் இவனை நோக்கி நீ இங்ஙனம் இகழ்வதற்குக்காரணம் யா தென வினவினர். தனது விருத்தாந்தத்தைத் தெரிவித் தான். வைத்யசாஸ்திரி நகைத்து நீ சாஸ்திரத்தின் ஸம்ப்ர தாயத்தைக் குருமுகமாகவிருந்து அறிந்துகொள்ளாமல் விபரீதார்த்தஞ் செய்துகொண்டு சாஸ்திரத்தை நிந்திப்பது முறையில்லை யென்றுசொன்னர் அப்பொழுது அவன் வைத்ய சாஸ்திரியைநோக்கி நும் வைத்யசாஸ்திரத்தில் லங்கனபதத்திற்குக் கூறிய பொருளென்ன என்று வின வினன். அதற்கவர், அஜீர்ணத்தாலுண்டாகிய ஜ்வரத் திற்கு உபவாஸமாயிருத்தலே பரமௌஷதமாம். இங்கு இவ்வாறே லங்கன பதத்திற்குப் பொருள் கொள்ளவேண் டும். அதை விட்டு நீ "அபத்யம் க்ருத்வா சுசோத்யம் கரோதி" (மருந்திற்கு விரோதமாக அபத்யத்தைச் செய்வ தால் கஷ்டம் நேர்ந்தபொழுது, தான் மருந்திற்கேற்றபடி நடந்தும் மருந்தின் குணதோஷத்தால் தனக்குக் கெடுதி நேர்ந்ததாகச் சொல்லிக்கொள்வது) என்பது போலிருக் கிறது என்று சொன்னர். இது கேட்ட அவன் மிகவும்

வியாகூலங்கொண்டு, பின் வைத்யசாஸ்திரத்தைக் குரு முகமாகவிருந்து முறையாகக் கேட்டுத் தெளிந்தான். இன்னும் இவ்வாறே கர்ண பரம்பரையாகச் சொல்லப் பட்டுவரும் வரலாறுகளும் உண்டு. இதனால், தத்வ சாஸ்திரங்களைக் குருமுகமாகவிருந்து முறையாக அப்ய ஸிக்காவிட்டால் விபரீதபலமே ஸித்திக்குமென்பது வெளியாயிற்று.

சும—ஸ்வாமி! மறையின் மறைபொருளெல்லாம் கீதையில் விஸ் தரிக்கப்பட்டதாக அருளுனீர்.

(1) மறை என்பது என்ன?

(2) அது எத்தனை வகைப்பட்டது?

(3) அதற்கு அதிகாரியாவர்?

(4) படிக்கவேண்டிய முறை எப்படி?

(5) எத்தனைபாகமுள்ளது?

(6) அதற்கு மறையென்றுபெயர் வழங்வதற்குக் காரணம் என்ன?

(7) அதைப் படிக்கவேண்டியவன் இருக்கவேண்டும் முறை என்ன?

(8) அதன் வழக்கம் என்ன?

(9) விருத்தாசாரம் எப்படி?

(10) அதை உபதேசிப்பார் யார்?

இது விஷயங்களைத் தெளிவாக அருளிச்செய்ய வேண்டும்.

(தொடரும்.)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR : MADRAS-41
105

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

*திருமண்காப்பு வைபவம்.

"பேராறுமூழ்கிமறைநூல்பிதற்றிமிடறும்பிளந்துபிறவித்
தூராறுமாறுநினையாமலுங்கடொழிலேபுரிந்தசுமடீர்
ஓராறுபேதசமயங்களுக்குமுருவாகிநின்றவொருவன்
ஈராறுநாமமுறைசெய்துமண்கொடிடுவார்கள்காணுமிமையோர்"

"தாழ்வறுசீரூர்த்துவபுண்டரந்தன்னைவிதிப்படியேதரித்துக்கொண்டு
வேள்விவடிவாகியநாரணனாராதனையைவிரும்புகின்றார்
வாழ்வுளதங்குலத்தோரையேழுதலைமுறையளவும்மனத்தால்வாக்கால்
சூழ்வினையைப்பற்றறுத்துப்பரகதியையடைவிப்பார் துணையாயென்றும்"

ஒவ்வொருமதத்தினரும் தங்கள் தங்கள் மதங்களைக் குறித்துக்காட்ட ஒவ்வொரு அடையாளத்தைத் தரித்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுள் வேதாந்தசமயிகள் அணிந்துகொள்ளும் குறி புண்ட்ரம் என்று பெயர்பெறுவதாகும்.

புண்ட்ரம் என்றால் ரேகை. அது நெற்றியில் தரிக்கப்படுவது. அது நான்குவிதம்— ஊர்த்துவபுண்ட்ரம், திரியக் (திரி) புண்ட்ரம், வர்த்துலாகாரம், அர்த்தசந்திராகாரம் என்பனவாம். பட்டாகாரம், திலகம் என்ற இரண்டையும் சேர்த்து ஆறாகவும் சொல்லுவர்.

ஊர்த்துவபுண்ட்ரமாவது நெற்றியில் நாசிகாமூலமுதல், கேசபரியந்தம் மேல்நோக்கி மூன்றுரேகைகளாய் இடப்படுவது. திரியக் புண்ட்ரம், நெற்றியில் குறுக்காக மூன்று ரேகைகள் தரிப்பது. பூர்ணசந்திரனைப்போல வட்டமாக இடப்படுவது வர்த்துலாகாரம். பாதிச்சந்திரனைப்போல இடப்படுவது அர்த்தசந்திராகாரம். சவுக்கமாகத் தரிக்கப்படுவது பட்டாகாரம். பூசணிவிதைபோல் தரிக்கப்படுவது திலகம்.

சாதாரணமாக, பிராமணருக்கு ஊர்த்துவபுண்ட்ரமும், க்ஷத்தி

---

*இது, திருநெல்வேலி ஸ்ரீவைஷ்ணவ சமயதர்ம அபிவிர்த்திசங்கத்தின் வெளியீடாக ஸ்ரீமாந், S. V. கள்ளப்பிரான்பிள்ளையவர்கள் எழுதியதினின்று ஸங்க்ரஹிக்கப்பட்டது.

MALLADI OPADHYAYA DR. U. V. SWAMINATHA IYER LIBRARY THIRUVANMIYUR MADRAS-41

ரியருக்கு திலகமும், வைசியருக்கு பட்டாகாரமும், சூத்திரருக்குத் திரிபுண்ட்ரமும், விதிக்கப்பட்டிருக்கின்றன.

பிராமணருக்கு ஊர்த்துவபுண்ட்ரமும், அரசருக்குப்பிறையின் கீற்றும், வணிகருக்கு வட்டமும், சூத்திரருக்குத் திரிபுண்ட்ரமும், உரியனவாம் என்றும் கூறுவர்.

ஊர்த்துவபுண்ட்ரம் ஊர்த்துவலோகமாகிய ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ப்பிப்பது. திரிபுண்ட்ரம் சிவலோகத்தை அடைவிப்பது. மற்றைய நான்கும் அர்த்தகாமங்களைத் தருவன.

ஊர்த்துவபுண்ட்ரம் கோபி சந்தனத்தினலாவது, துளசிவேர் அடி மண்ணினலாவது, வெள்ளைமண்ணினலாவது இடப்படுவது. திரிபுண்ட்ரம் அக்நிஹோத்ரம்செய்வதனுலுண்டாகிய நீற்றினல் (சாம்பலால்) தரிக்கப்படுவது. மற்றைய நான்கும் மண்ணினலாவது சந்தனத்தினலாவது இடப்படுவன.

பிராமணருக்குத் திருமண்ணும், க்ஷத்திரியருக்குச் சந்தனமும் வைசியருக்கு வில்வவேரும், சூத்திரருக்கு வெண்ணீறும் புண்ட்ர தாரணத்திற்குரியனவாக விதிக்கப்பட்டிருக்கின்றன.

விஷ்ணுவின் அவதாரமான வராகபகவான் பூமியைச் சமுத்திரத்திலிருந்து எடுத்து மேலே ஸ்தாபித்துத் தனது திருமேனியை உதறினர். அப்பொழுது அவர் ஜடையிலிருந்து வெளுத்தமண்ணும், மூக்கிலிருந்து மஞ்சள்மண்ணும், காலிலிருந்து சிவப்புமண்ணும், உரோமத்திலிருந்து கறுப்புமண்ணும் உண்டாயின.

கறுப்புமண் சாந்தியையும் சிவப்புமண் வசியத்தையும், மஞ்சள்மண் ஐசுவர்யத்தையும், வெளுத்தமண் மோக்ஷத்தையும் கொடுப்பனவாம். கறுப்புமண் சம்பத்தையும், சிவப்புமண் ஆரோக்கியத்தையும், மஞ்சள்மண் ஜ்ஞானத்தையும், வெள்ளைமண் மோக்ஷத்தையும் தரும் என்றும் சொல்லுவர்.

ஊர்த்துவபுண்ட்ரம் இரண்டு; சச்சித்ரம், அச்சித்ரம் என- சச்சித்ரமாவது இடைவெளியோடு கூடியது. அச்சித்ரம் இடைவெளியில்லாமல் தண்டம்போல் ஓரேரேகையா யிடப்படுவது. திரிகுண பேதத்தால் புண்ட்ரம் நான்குவிதமென்றுஞ் சொல்லுவர். அவை ஆமரம், ஆர்ஷம், ஆசுரம், மானவம் என்பன. வெளுப்புமண்ணு

லர்வது ஆமரம், சந்தனத்தாலாவது ஆர்ஷம், பஸ்மத்தாலாவது ஆசுரம்; குங்குமம் முதலியவைகளாலாவது மானவம். அவை முறையே சாத்விகமும், ராஜசமும், தாமசமும், ராஜசதாமசமுமாகிய குணங்களுடையன.

ஸ்ரீமந் நாராயணனைத் தவிர மற்றைய தேவதைகளுக்கு அடிமையில்லாத அநங்யார்ஹசேஷ பூதனாகிய ஸ்ரீவைஷ்ணவனுக்கு உரியது திருமண்காப்பு. அதாவது சுவேதமிருத்திக ஊர்த்துவ புண்ட்ரம். இது திருமால் அடியாரான சகலஜாதியாருக்கும் பொது. அத் திருமண்காப்பு, நல்லதாயும் வெளுப்பாயுமிருக்கிற மண்ணினால் நாசிக மூலமுதல் புருவத்தின் இடை வரைக்கும் இரண்டு அங்குலத்திற்கு அதிகப்படாமலும், ஒரு அங்குலத்திற்குக் குறையாமலும், பாதிமலர்ந்த தாமரைப்பூப்போல அல்லது அஷ்டமி சந்திரனைப் போலப் பீடமும், அதை ஒட்டியே ஊர்த்துவமுகமாய்க் கேசம் வரைக்கும், மேல்நோக்கிய இரண்டு ரேகைகள் ஒவ்வொரு அங்குலமுடையவைகளாயும், புருவத்தினுடைய நடுமுதலாகக் கேசம்வரைக்கும் இரண்டு விரற்கிடை அகலத்திற்கு அதிகப்படாததாயும், ஒரு அங்குலத்திற்குக் குறையாமலுமிருக்கிற அகலத்தையுடைய இடைவெளியும் அந்த இடைவெளியில் தீபஜ்வாலைபோல் தரிக்கப்பட்ட சிவந்த ஸ்ரீ சூர்ண ரேகையுமுடையதாயிருக்கும். ஒரு அங்குலபீடம் என்று சொல்லியிருப்பதை வடகலைத் திருமண்காப்புக்கு ஆதாரமாகவும் இரண்டு அங்குலமென்று சொல்லியிருப்பதைத் தென்கலைத் திருமண்காப்புக்கு ஆதாரமாகவும், கொள்ளுகிறார்கள்.

திருமுட்டம், வேங்கடம், அரங்கம் முதலிய பகவானுடைய க்ஷேத்திரங்களிலுள்ள புஷ்கரணிகளிலாவது அந்த க்ஷேத்திரங்களிலுள்ள மலையின் உச்சியிலாவது, நதியின் கரையிலாவது, வில்வமரத்தின் அடியிலாவது, ஜலாசயங்களிலாவது, சமுத்திரக்கரையிலாவது, புற்றிலாவது, பகவானுக்கு அபிஷேகம் செய்த தீர்த்தம் ஓடுகிற இடத்திலாவது திருமண்காப்பிட மண் எடுத்துக்கொள்ளவேண்டும். துளசியடிமண் மிகச்சிறந்தது.

வேதமந்திரங்களைச் சொல்லி வெள்ளைநிறமுடைய மண்ணாலேயே விஷ்வக்ஸேனர் முதலான கணங்களும் சனகாதிகளும் புண்ட்ரம் தரிக்கிறார்கள். இது சிஷ்டாசாரம்.

வேதமந்திரம் சொல்ல அருகர்க ளல்லாதவர்களும் அது தெரியாதவர்களும் வெளுத்த மண்ணைத் திருமந்த்ரம் த்வயமந்த்ரம் இவைகளைச் சொல்லிக் குழைத்துத் த்வயத்தினாலேயே மந்த்ரித்து நெற்றி முதலான இடங்களில் விரலினால் தரிக்கவேண்டும். இந்தப் புண்ட்ரத்தை நேராயும், நன்றாயும், பரிசுத்தமாயும், மிகவும் பிரகாசமாயும் தரிக்கவேண்டும்.

காமத்தை அடைய விரும்புகிறவன் அதாவது மைந்தனை விரும்புகிறவன் (அநாமிகை) மோதிரவிரலினாலும், மோக்ஷத்தை விரும்புகிறவன் (தர்ஜனி) ஆள்காட்டிவிரலினாலும், ஆயுளை விரும்புகிறவன் (கனிட்டிகை) சுண்டுவிரலினாலும், புஷ்டியை (பொருளை) விரும்புகிறவன் (அங்குட்டம்) கட்டைவிரலினாலும் திருமண் தரிக்க வேண்டும். நடுவிரலாலும் நகத்தினாலும் அதனை இடுதல் கூடாது. அது கோரரூபமாயிருக்கும்படி ஒருநாளும் இடக்கூடாது.

பன்னிரண்டு (த்வாதச ஊர்த்துவ) புண்ட்ரங்களைத் தரிக்கும் இடங்களாவன:- (1) நெற்றி (2) வயிறு (நாபிக்கு மேலே) (3) மார்பு (4) உள்கழுத்து (5) வயிற்றின் வலப்புறம் (6) வலதுகையின் மேல் பாகம் (7) வலக்கழுத்து (8) வயிற்றின் இடப்புறம் (9) இடதுகையின் மேல்பாகம் (10) இடது கழுத்து (11) முதுகின் அடிப்பாசம் (12) பிடரி.

மிருதிகை ஜலத்தைவிட்டு அலம்பித் தலையில் தரிப்பதுடன் சேர்த்து ஊர்த்துவபுண்ட்ரம் பதின்மூன்று என்றும் சொல்லுவார்கள்.

நெற்றியிலும், கழுத்தின் மூன்றுபுறங்களிலும், பிடரியிலும், முதுகிலும், நான்கு அங்குல நீளமுள்ளவைகளாயும் வயிற்றில் மூன்றும் பத்து அங்குல நீளமுள்ளவைகளாயும், மார்பிலும், இரண்டு கைகளிலும் எட்டு அங்குலம் நீளமுள்ளவைகளாயும் திருமண் தரிக்கவேண்டும்.

பீடம் நெற்றியில் அஷ்டமி சந்திரமண்டலம்போலாவது, பாதி விகசித்த தாமரைப்பூப்போலாவது இருக்கவேண்டும். மற்ற இடங்களில் சதுரமாக இருக்கவேண்டும்.

மேற்சொன்ன பன்னிரண்டு இடங்களிலும் புண்ட்ரங்களைத் தரிக்கும்போது சொல்லவேண்டிய மந்த்ரங்கள்:—நெற்றியில் கேசவாயநம:, வயிற்றில் நாராயணாயநம:, மார்பில் மாதவாயநம:, உள் கழுத்தில் கோவிந்தாயநம:, வயிற்றின் வலது பாகத்தில் விஷ்ணவே நம:, வலதுகையில் மதுசூதனாய நம:, வலக்கழுத்தில் த்ரிவிக்ரமாய நம:, வயிற்றின் இடது பாகத்தில் வாமநாயநம:, இடதுகையில் ஸ்ரீதராயநம:, இடது கழுத்தில் ஹ்ருஷீகேசாய நம:, முதுகின் அடிப் பாகத்தில் பத்மநாபாய நம:, பிடரியில் தாமோதராய நம:, பதின் மூன்றாவதாகிய சிரசில் வாசுதேவாய நம:

கேசவாதி நாமங்களைச்சொல்லி இடப்படுவதால் ஊர்த்துவபுண்ட்ரத்திற்குத் "திருநாமம் என்று பெயராயிற்று.

இடவேண்டிய இடங்கள் பதின்மூன்று என்றும், பன்னிரண்டு என்றும், எட்டு என்றும், ஆறு என்றும், நான்கு என்றும், ஒன்று என்றும் சொல்லுவார்கள். மேலே சொன்ன பன்னிரண்டு இடங்களில் கழுத்தும் பிடரியும் இரண்டு மேல்தோள்களும் (கழுத்தின் இருபுறங்களும்) தவிர்ந்தால், இடம் எட்டு அதற்கு அஷ்டாக்ஷரம் மந்த்ரம். இரண்டு தோள்களும் "கழுத்தின் இருபுறங்களும், மார்பும் நெற்றியும் ஆகிய இடங்கள் ஆறுக்கு, கேசவன் முதல் மதுசூதனன் முடிய உள்ளனவும், மார்பும், நெற்றியும், இரண்டு தோள்களும் ஆகிய நான்கு இடங்களுக்குக் கேசவன், அச்சுதன், அநந்தன், கோவிந்தன் என்பனவும், நெற்றிக்கு மட்டும் கேசவன் என்பதும் மந்த்ரங்களாம். ஸ்திரீகள் பிறைக்கீற்றுப்போலத் திருமணிட வேண்டும்.

திருமண்ணின் ஆகாரங்கள் (வடிவு) ஆவன; தீபஜ்வாலை, வேணுபத்ரம் (மூங்கில் இலை), பத்மகுஜம் (தாமரை மொட்டு), குமுதம் (ஆம்பல்), மத்ஸ்யம் (மீன்), கூர்மம் (ஆமை), சங்கம் (சங்கு) திந்திருணீபத்ரம் (புளிய இலை). சூர்ப்பம் (சுளகு), மோஹினிபுஷ்பம் அல்லது தூர்த்தூரம் (ஊமத்தம்பூ) தண்டாகாரம், ஏகபாதாகாரம் (ஒருபாதம்) அக்னிஜ்வாலை (தீயின்ஜ்வாலை), என்பன. இவைகளெல்லாம் சாமான்ய வைஷ்ணவர்களுக்கு. அனன்யார்ஹசேஷபூதனான பிரபன்னன் ஹரி-பாதாகாரமான புண்ட்ரமே தரிக்கவேண்டியது.

ஊர்த்துவ புண்ட்ரத்தின் இரண்டு ரேகைகளுக்கு மத்தியிலுள்ள இடையிடத்தில் ஸ்ரீ சூர்ணத்தை தரிக்கவேண்டும். ஸ்ரீ என்றால்

ஹாரித்ரை (ஹரித்ரா—மஞ்சள்) ஹாரித்ரையாவது-பகவானுக்கு இஷ்டமானது. அதன்பொடி ஸ்ரீசூர்ணம். அது சிவந்த நிறமாயிருக்கவேண்டும். அது ஸ்ரீவர்ணமாயும், ஆதித்யவர்ணமாயும், அக்னிவர்ணமாயும், அருணவர்ணமாயும், பதுமவர்ணமாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

மஞ்சள்நிறம் ஜ்ஞானத்தையும் நீலநிறம் தர்மத்தையும், கறுப்பு நிறம் காமத்தையும், சிவப்புநிறம் மோக்ஷத்தையும் தருவதால் சிவப்பு நிறமே உத்தமமானது.

மேலும் குமரிமுதல் இமயம்வரை உடையவர் ஸ்ரீசூர்ணமென்று சிவந்த ஸ்ரீசூர்ணத்திற்கே பிரசித்தியிருக்கிறது. ஸ்ரீசூர்ணம் தங்கநிறமாயிருக்கும் என்று சொல்லப்படுவதாலும், தங்கம் மஞ்சள்நிறமாதலாலும், ஸ்ரீசூர்ணம் மஞ்சள்நிறமாயே யிருக்கவேண்டுமென்று சிலர் சொல்லுவார்கள். தங்கத்தை அதிக மெல்லிய தகடாக அடித்துப்பார்த்தால் அது சிவப்பாகவே யிருக்குமென்பதை இவர்கள் பரீக்ஷித்துத் தெரிந்துகொள்வாராக. சுத்தப் பொன்னைச் செம்பொன் என்று வழங்குவதையும் கவனிக்கவேண்டும்

புருஷர்கள் புருவத்தின் நடுமுதல் கேசம் வரைக்கும், தீபாகாரமாயும் சுமங்கிலிகள் மூங்கில் இலையைப் போலவும் கன்னிகைகள் பூசணி விரைபோலவும் வைதவ்யமடைந்தவர்கள் எள்ளைப்போலவும் ஸ்ரீசூர்ணம் தரிக்கவேண்டும்.

நல்லதாயும் சிவந்துமிருக்கிற மஞ்சளை பால்குன (மாசிமாசம் சுக்லபக்ஷம் முதல்) ஏகாதசியில் பொடித்து, கஸ்தூரி, குங்குமப்பூ, சுவர்ணசந்தனம், கருப்பூரம் துளசி முதலியவைகளைச் சேர்த்துப் புஷ்பவாசனைகளை யூட்டி ஸ்ரீய:பதிக்கு ஸமர்ப்பித்து அதிகமாக வேத மந்த்ரங்களால் பூஜித்து, பெரிய பாகவத கோஷ்டிக்குச் சமர்ப்பித்துத் தாங்களும் தரிக்கவேண்டும். கஸ்தூரி முதலானவைகளைச் சேர்க்க சக்தியில்லாவிட்டால் படிகாரம் சேர்க்கலாம். ஸ்ரீசூர்ணமானது லக்ஷ்மீ ஸ்வரூபமானது. மஞ்சள்காப்பைத் தரித்துக் கொண்டு லக்ஷ்மியை அதில் ஆவாகனம்செய்யவேண்டும்.

மேலே குறித்திருக்கிற பன்னிரண்டு இடங்களிலும் இடப்படும் மஞ்சள்காப்புக்கு மந்த்ரங்கள் முறையே:-

(1) ஸ்ரீதேவியை நம: (2) அமிர்தோத்பவாயை நம: (3) கமலாயை நம: (4) லோகசுந்தர்யை நம: (5) ஸ்ரீ விஷ்ணுபத்நியைநம: (6) ஸ்ரீ வைஷ்ணவியை நம: (7) வராரோஹாயை நம: (8) ஹரிவல்லபாயை நம: (9) சார்ங்கிண்யைநம: (10) தேவதேவிகாயை நம: (11) மஹாலக்ஷ்மியை நம: (12) லோகபூஜிதாயை நம: என்பனவாம்.

மேலும் ஊர்த்துவபுண்ட்ரத்தை ப்ரணவஸ்வரூபமாகத் தியரனிக்கச் சொல்லியிருப்பதால் [அகாரத்திற்கு அர்த்தம் ஸ்ரீமந் நாராயணன், உகாரத்திற்கு அர்த்தம் லக்ஷ்மி, மகாரத்திற்கு அர்த்தம் ஜீவாத்மாக்கள்.] ஸ்ரீமந் நாராயணனை இரண்டு ஹரிபாதாகாரமான ஊர்த்துவ ரேகைகளிலும், ஸ்ரீ மஹாலக்ஷ்மியை ஸ்ரீசூர்ணத்திலும் ஜீவாத்மாக்களுக்கெல்லாம் பிரதானராயும் ஆசார்யராயுமிருக்கிறபடியாலும் அர்ச்சன ப்ரகரணத்தில் பீடத்தில் ஆதிசேஷனை ஆவாகனம் பண்ணச்சொல்லி சாஸ்திரவிதியிருப்பதாலும் "ராமாநுஜஸ்த்வாதிசேஷ:" என்னும் நிகண்டுபலத்தாலே ராமாநுஜ என்று ஆதிசேஷனுக்கே முக்கியமான பெயராகையாலும், ஸ்ரீ ராமாநுஜாசார்யரைப் பீடத்திலும், அந்த அந்த மந்த்ரங்களினால் ஆவாகனம்பண்ணி த்யானம் செய்யவேண்டியது முக்கியமாகையாலே, ஊர்த்வபுண்ட்ரம் ப்ரணவ ஸ்வரூபமாகிறது என்பது தெளிவு.

மேலே சொல்லியிருக்கிறபடி சத்சித்ர ஈவேதமிருத்தி கோர்த்துவ புண்ட்ரம் அணிபவர்களைச் சகல லோககாரணனும் நாரணன் எந்தத்துன்பமும் எய்தாதபடி காக்கும். அதனால்தான் இதற்குத் "திருமண்காப்பு" என்று பெயர். இதை அணிபவர் திருமாலின் அருள்பெற்றுப் பாதகம் எல்லாம் தொலைத்துப் பரமானந்தம் பயில்வார். இப்புண்ட்ரத்தைத் தரித்து வேள்விவடிவாகிய நாராயணனுடைய ஆராதனை செய்பவர் தங்குலத்தோரை ஏழு தலைமுறையளவும் மனமொழி மெய்களால் செய்தவினைகளைப் பற்றறுத்துப் பரகதியை அடைவிப்பார்.

ஊர்த்துவபுண்ட்ரங்களைத் தரிக்கிற பிராமணன் சம்சார பந்தத்திலிருந்து விடுபடுகிறான். ஊர்த்துவ புண்ட்ரங்களின் நடுவில் லக்ஷ்மியோடுகூட நாராயணன் வசிக்கிறார். ஆதலால் எவனுடைய சரீரத்தில் திருமண்காப்புகள் தரிக்கப்பட்டிருக்கின்றனவோ அவனுடைய தேகம் பகவானுக்குப் பரிசுத்தமான திருக்கோவிலாகிறது.

எவன் திருமண்காப்பைத் தரிக்கிறானோ அவன் எல்லாப்புண்ய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தவனாவான். எல்லா யஜ்ஞங்களையும் செய்தவனாவான். அவன் எல்லா லோகங்களிலும் பூஜிக்கப்பட்டவனாய் விமானத்தில் ஏறிக்கொண்டு பரமபதத்தை அடைவான்.

இவனுக்குத்தான் மோக்ஷம் சித்திக்கிறது. திருமண்காப்புத் தரித்துக்கொண்டே நித்திய நைமித்திக கருமங்களையும் யஜ்ஞம், தானம், ஜபம், ஹோமம் தபசு முதலியவைகளையும் செய்யவேண்டும். அப்படித் தரியாமல் செய்யப்படுபவைகள் எல்லாம் வியர்த்தங்களேயாம். திருமண்காப்புத் தரித்துக்கொண்டு சிரார்த்தம் செய்தால் அனேகமாயிரம் கல்பகாலம் கயையில் சிராத்தம்செய்த பலனுண்டாகும். சிரார்த்தத்தில் திருமண் தரித்தவர்களையே புசிக்க வேண்டும்.

வேதபாராயணஞ்செய்யும்வேளையிலும், வேள்விசெய்யும் பொழுதும், சாப்பிடுங்காலத்திலும், சுபகருமஞ்செய்யுந்தோறும் பூதபிசாசங்கள் அணுகாவண்ணம் ஊர்த்துவபுண்ட்ரம் தரிக்கவேண்டும். ஊர்த்துவபுண்ட்ரம் தரித்திருப்பவர்களைக் கண்டால் யமதூதர்கள் நாகத்தைக்கண்டு அடங்கும் தவளைபோலாவார்கள். மேற்சொல்லியவை திருமண்காப்புத் தரிப்பதன் பலன்களாம்.

இனிச் சிலர், திருமால் திருவடியை அவர் அடியார் நெற்றியில் தரித்துக்கொள்வதிருக்கட்டும், பெருமாளுக்கே அவர் பாதத்தை அவர் நெற்றியில் தரிப்பது அனுசிதமென்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு அதன் உண்மையை அறிவிப்பது அவசியமாகும்.

அடியவருக்கு நெற்றியில் இடுவது ஹரிபாத ஆகாரமான (வடிவான) ஊர்த்துவபுண்ட்ரம் (ரேகை) ஒழிய திருமால் திருவடியல்ல. அதைப்போல் ரேகையிடுவது, கோவில்களில் பெருமாளுக்கு திருமஞ்சனஞ் செய்தல், திவ்யாபரணங்கள் தரித்தல், திருப்பரியட்டஞ் சேர்த்தல், போனகமளித்தல் முதலியவைகள் எம்பெருமானை அலங்கரித்து உபசாரஞ் செய்தலாகும். அப்பொழுது திருமண்ணையும் அலங்காரத்திற்காக ஒரு ஆபரணம்போல் சாத்துகிறார்களேயொழிய வேறல்ல. மேலும் நாராயணன், சிஷ்யன் இருக்கவேண்டிய இருப்பை நாட்டார் அறியவேண்டியதற்காகத் தான் நரனுமிருந்து திருமந்த்ரத்தை வெளியிட்டருளினன். கிருஷ்ணவதாரத்தில் அவனுக்கு

நித்திய நைமித்திக கருமங்கள் செய்து அடையவேண்டிய பலன் ஒன்றுமில்லையாயினும், உலகத்தார் அவைகளை அனுஷ்டித்துப் பலனடைய வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவைகளைத் தான் அநுஷ்டித்துக் காட்டினான். தாசனுடைய சின்னங்களும் தினசரிகளும் அவனது யஜமானனுடையவைகளைப்போலவே யிருக்க வேண்டும். ஆதலால், எம்பெருமானும் தன்னுடைய அடியார் இருக்கவேண்டியதையும், அனுசரிக்கவேண்டியதையும் தெரிந்து கொள்ளும்பொருட்டு மாதிரி காட்டுகிறதாகவுமிருக்கிறது. பெருமாளுக்குப் பக்தர்களை அழைக்கிற மாதிரி ஒரு கையும் (ஆஹ்வான அஸ்தமும்) அவர்களுக்குப் பயமொன்றுமில்லாமல் அவர்களைக் காக்க அவர்கள் சேரவேண்டியது தன்திருவடி என்று காட்டுகிற மற்றொருகையும் (அபயாஸ்தமும்) இருப்பதுபோல இதை அடைந்தவர் பெறும்பேறு ஊர்த்துவ லோகமாகிய ஸ்ரீவைகுண்டம் மேலே யிருக்கிறது, அதில் சேர்ப்பிப்பேன் என்று இந்த ரேகைகள் காட்டுவன ஆகவும் ஆம்.

மேலும், ஒவ்வொரு மதத்தினரும் அந்த அந்த மதத்தினருக்குள்ள குறிகளை அவரவர்கள் தெய்வங்களுக்கும் தேவதைகளுக்கும் இடுவதை நாம் பிரத்யக்ஷமாகக் காண்கிறோம். ஆகையால் அந்தத் திருமண்காப்பு ரேகையே ஒழியப்பாதமல்ல என்பதையும் இது அலங்காரமாகத்தான் தரிக்கப்படுகிற தென்பதையும் தெரிந்தவர்களுக்குச் சந்தேகத்திற்கே இடமில்லை.

இன்னும், சிலர் வேதமே பிரமாணம், வேதத்திலும் அச்சில் வந்த 108 உபநிஷத்துக்களே முக்கியம். அவற்றிலும் வாசுதேவோபநிஷத்தே முக்கியம்; அதில் சொல்லியபடி கோபிசந்தனத்தால் அச்சித்ரமாய் அதாவது நடுவில் இடைவெளியில்லாமல் ஒரே ரேகையாய் முகமுதலான இடங்களில் தரிக்கவேண்டியதே முக்கியம். வேறு எவ்வித புண்ட்ரமும் தரிக்கக்கூடாது. தரித்தால் நரகமே பலம். ஸ்மிருதி, இதிஹாசம் புராணம் முதலியவை பிரமாணமல்ல என்று சொல்லுகிறார்கள். இது பிரமாணத்தோடு சேராது. நான்கு வேதங்களும் முக்கியப் பிரமாணங்கள் என்பதும், அவைகளுக்கு அங்கங்களாகிய சிக்ஷை முதலியவைகளும், உபப் பிரும்மணங்களான ஸ்மிருதி முதலியவைகளும் பிரமாணங்கள் என்பதும் ஆரியர்களான சர்வஜன சம்மதம். பிரஹ்மஜ்ஞாநிகளாகிய, மனு, வியாசர் முதலான

பரமருஷிகளால் செய்யப்பட்ட சாஸ்திரங்களுக்கும் பிரமாணத்தைச் சொல்லி அந்தப்படி நீங்களும் செய்யவேண்டுமென்று பிரபலப் பிரமாணமான வேதத்திலேயே சொல்லியிருக்கிறது.

'சுருதிஸ்மிருதிகள் என்னுடைய ஆஜ்ஞைகள், அவைகளை எவன் அதிக்கிரமிக்கிருனே அவன் எனக்குத் துரோகி; என்னுடைய ஆஜ்ஞையை மீறினவன், எவ்வளவு பக்தி செய்திருந்தபோதிலும் அவன் வைஷ்ணவனே இல்லை'' என்கிற பகவானுடைய வாக்கியத்தை அனுசரித்தே இருக்கவேண்டியது, நமக்கு ஸ்வரூபமும் கடமையுமாகையால், சுருதிஸ்மிருதி இதிஹாஸ புராணங்களையும், அவைகளை அனுசரித்த சிஷ்டாசாரங்களையும், பிரமாணமாய் ஒப்புக்கொண்டு அனுஷ்டிக்கவேண்டும். ஆகையால் வேதங்களைப்போலவே ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்திரத்தை வேத முதலான சாஸ்திரங்களிலே பிரமாணமாகச் சொல்லியிருக்கிறது. அவைகள் நிர்வாணோபநிஷத்திலும், சதபத ப்ராஹ்மணத்திலும், சேஷோபநிஷத்திலும், பாரதாதிகளிலும், பிரசித்தமாயே இருக்கின்றன. ஆகமப் பிராமாண்யம், பாஞ்சராத்ரரக்ஷை முதலானவைகளிலும் காணலாம்.

எல்லா சாஸ்திரங்களையும் பார்த்தாலொழிய, ஓரர்த்தம் நிச்சயிக்கப்படமாட்டாது என்று விளங்கிய ''சர்வசாகாப்ரத்யய'' நியாயத்தினுலும், சாஸ்திரத்தில் ஓரர்த்தம் நிச்சயிக்கப்படவேண்டுமானல் 'உபக்ரமம், உபசம்ஹாரம், அப்யாசம், அபூர்வதாபலம், அர்த்தவாதம், உபபத்தி ஆகிய எல்லாக் காரணத்தாலேயும் நிச்சயிக்கவேண்டுமென்ற நியாயம் ஏற்பட்டிருப்பதாலும், அவற்றை அனுசரித்தே எல்லா சாஸ்திரங்களின் அர்த்தத்தையும் பார்த்துத்தான் ஓரர்த்தம் ஸம்சயமற்று நிச்சயிக்கப்படலாம்.

ஆகையால் எல்லாப் பிரமாணங்களையும் ஒன்றுசேர்த்து, இடங்களுக்கு அனுகுணமாக, முன்பின் விரோதமில்லாமல் பொருள் தெரிந்துகொள்வதே தக்கது.

ஸ்ரீ:

அருளிச்செயலும் வ்யாக்யானங்களும்.

(48-ம் பக்கத் தொடர்ச்சி.)

கர்மவசனுன ஆத்மாவுக்குச் சரீரம் மாறிக்கொண்டே வரும் என்பதற்கு மகிழவிதை திருஷ்டாந்தமாகக் கூறப்பட்டுளது. ஜோதிஷ சாஸ்திரிகள் கணிதமிடுகிற காலத்தில் மகிழவிதையை ஒவ்வொரு ஸ்தானத்திலும் வைத்துக் கணக்கிடுதல் மரபு. அவ்வாறு கணக்கிடுகின்ற காலத்தில் சிறிய ஸ்தானத்திலிருந்த விதை பெரிய ஸ்தானத்திற்கு மாறுவதுண்டு. அதுபோல ஆத்மா அல்ப சரீரத்தை விட்டு நல்ல சரீரத்தையுங் கொள்ளும்; அதைவிட்டு அல்ப சரீரத்தையுங் கொள்ளும். இவ்வாறு சுழன்றுவருகிற துக்கத்தினின்றும் நீங்கி ஸர்வகாரணமாயிருக்கின்ற ஸர்வேசுவரனைக் காணக்கருதுவார் சரீரத்தில் பற்றற்றிருத்தலாகிய உபாயத்தைக் கைப்பற்றவேண்டும். இன்றேல் காணுதல் அரிது. இவ்விஷயம்,

“மகிழலகொன்றேபோல்மாறும்பல்யாக்கை
நெகிழமுயல்கிற்பார்க்கல்லால்—முகிழ்விரிந்த
சோதிபோற்றேன்றும்சுடர்பொன்னெடுமுடியெம்
ஆதிகாண்பார்க்குமரிது.

என்ற இப்பாசுரத்தால் அறியலாம்.

* “படுநேவ வராடிகேவ க்லிப்தா ஸ்தலயோ: காககணிகா ஸுவர்ண கோட்யோ:,பவ மோக்ஷணயோ ஸ்த்வயைவ ஜந்து:க்ரியதே ரங்கநிதே த்வமேவ பாஹி”

என்ற இந்த சுலோகத்தில் பட்டர் ஜோதிஷநூலார் சோகியை வைத்துக்கொண்டு கணிப்பார்களென்று ஸாதித்தார். இக்காலத்திலும் அவ்வாறே கணிப்பதைக் காணலாம். முற்காலத்தில் மகிழவிதையையுங்கொண்டு கணிப்பதுண்டென்று இதனுல் ஊகிக்கப்படுகிறது.

---

* (இ-ள்) ஸ்ரீரங்கநாதனே! கணிதசாஸ்திரத்தில் வல்லுநனுல் காணிஸ்தானத்திலும், கோடிஸ்தானத்திலும் வைக்கப்பட்ட சோகியைப்போல் தேவரீரால் ஸம்சாரத்தில் வைக்கப்பட்டிருந்த சேதனன் மோக்ஷத்தில் வைக்கப்படுகிறுன். இவ்வாறு ஸ்வதந்த்ரராகிய தேவரீர் அடியேனை ரக்ஷிக்கவேண்டும் என்றவாறு.

ரஜோகுண தமோகுணமுடையவர்கள் சாஸ்திரத்தால் சொல்லப்பட்ட உண்மையான வழி யாதென ஆராய்ந்து அதன்வழிச் செல்லாமல் சகரபுத்திரர்கள் அசுவமேதயாகத்தின்பொருட்டுத் தங்களால் விடப்பட்ட குதிரை காணுதொழிய, அவர்கள், கண்ணிற்கண்டாரை யெல்லாம் 'எம் குதிரையை நீ பிடித்தாய்' என்று பிடிப்பது போலத் தங்கள் அறிவிற்கேற்றவாறு மனத்தோன்றியபடி கண்டதோர் தெய்வத்தைப்பற்றி 'இவர் எமது இறைவர்' என்று சுதை வடிவாயும் விக்ரஹவடிவாயும் அமைத்துத் தொழுகிறார்கள். இவ்வாறு தொழுகின்றவர்களுடைய தலையிலும், இவர்களால் தொழப்பட்ட தேவதைகளுடைய தலையிலும் திருவடியை வைத்தவனாகிய திருவுலகளந்த எம்பெருமானே தொழுதற்கு முக்ய மூர்த்தியாவான். இது விஷயம்,

> "அவரவர்தாந்தாமறிந்தவாறேத்தி
> இவரிவரெம்பெருமானென்று—சுவர்மிசைச்
> சாத்தியும்வைத்தும்தொழுவர்உலகளந்த
> மூர்த்தியுருவேமுதல்"

என்று இப்பாட்டால் விளக்கலாயிற்று.

சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களாகிய பிருஹ்ம, விஷ்ணு ருத்ரமூர்த்திகளே முக்யராவார்கள். அவருள்ளும் கடல்வண்ணமுடைய ஸர்வேசுவரனே முக்யனுவான். இவனுடைய அருளைப் பெறுவதே புருஷார்த்தமேயன்றி மற்றவர்களின் அருளைப்பெறுவது வீணும். இவ்விஷயம்,

> "முதலாவார்மூவரேஅம்மூவருள்ளும்
> முதலாவான்மூரிநீர்வண்ணன்—முதலாய
> நல்லானருளல்லால்நாமநீர்வையகத்துப்
> பல்லாரருளும்பழுது."

என்ற இப்பாட்டால் விவரிக்கலாயிற்று.

இதைப்பற்றி, "பேற்றுக்கு உபாயம் அவன் நினைவு" என்று ஸ்ரீவசனபூஷணத்திலும் குறிப்பிடப்பட்டுளது.

ஸர்வேசுவரனது குணவிசேஷங்களை யாவராலும் அறியமுடியாது. அவன் ஈடுமெடுப்புமி லீசனுயிருப்பான். "தனக்குந் தன் தன்மையறிவரியான்" என்றால் பிறர்களால் அவனது தன்மைகளை

யறிவதெங்ஙனம்? அவனது இயல்பெல்லாம் அறிந்தோம் என்பவர்களே அறிவிலிகளாவார்கள். அறிதற்கரியா னென்றறிந்தவர்களே விசேஷஜ்ஞானமுடையவராவார்கள். "அறிந்தனவேதவரும்பொருள் நூல்கள், அறிந்தனகொள்கவரும்பொருளாதல்" என்று நம்மாழ்வாரும் வேதங்களும் அறிதற்கரிய பொருளென்றே அறிந்தன வென்று அருளியதாலுமறியலாம். இது விஷயம் இங்கு,

"பேரேவரப்பிதற்றலல்லாலெம்பெம்மானை
ஆரேயறிவாரதுநிற்க—நேரே
கடிக்கமலத்துள்ளிருந்துங்காண்கிலான்கண்ணன்
அடிக்கமலந்தன்னையயன்"

என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அவனது பெயரை எவரும் அடைவுகெடப் பிதற்றலாமேயன்றி அவன் தன்மையை முழுவது மறியமுடியாது. ஏனென்றால் அவனது திருநாபிக்கமலத்திலிருந்து அவனால் ஓதுவிக்கப்பட்ட பிருஹ்மாவும் அவனது திருவடிகளை யறியான் என்றவாறு.

கடற்கரையில் குடிசை கட்டிக்கொண்டிருந்தாலும், கடலை அளவிடமுடியாததுபோல, ப்ருஹ்மா ஸர்வேசுவரனுடைய திருநாபிக்கமலத்திலவதரித்தும் அவனதியல்பை யறியமாட்டான்.

இதனால் ஸர்வேசுவரனது தன்மையை யறியமுடியாதென்பதற்குக் கைமுதிகந்யாயத்தால் எடுத்துக்காட்டியபடி.

(தொடரும்.)

ஸ்ரீ:

நன்கொடை.

நமது பத்திரிகை, பல்லாண்டு பல்லாண்டாய் நிலைபெற்று வளர வேண்டியதற்காகப் பொருள்படைத்தாரெல்லாம் பொருளுதவிபுரிய வேண்டுமென்று முன் தெரிவித்துக்கொண்டதற்கேற்ப ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருக்குறுங்குடி ஸ்வாமி திருவுள்ளமுவந்து பொருளுதவிபுரிந்ததோடு, கீழ்க்குறிப்பிடப்பெற்ற சில ஸ்ரீமாங்

களும் பொருளுதவி செய்தார்கள். இவர்கள் நன்றி எழுமையும் மறக்கற்பாலதன்று. இதுபோல இன்னும் பல ஸ்ரீமாங்களும் பொருளுதவிபுரியவேண்டுகிறேன்.

ஸ்ரீமாந். வரயோகி ராமாநுஜ தாஸரவர்கள். ரூ 25—0—0
(நிகமம் ஜமீன்தார் சாரிட்டி. ஸ்ரீரங்கம்)

,, சொ. சு. நாகமணிசெட்டியாரவர்கள் ரூ 25—0—0
(ஸ்ரீரங்கம்)

,, இ. ராகவராமாநுஜ தாஸரவர்கள் ரூ 25—0—0
(ஸ்ரீரங்கம்)

செல்லம்மாள் ரூ 25—0—0
(ஸ்ரீரங்கம்)

ப. அ.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

மதிப்புரை.

ஸ்ரீபாஷ்யம்.

[ச்ருதப்ரகாசிகாஸஹிதம் தமிழ் மொழிபெயர்ப்பு.]

பகவதம்சபூதரான ஸ்ரீ வேதவியாஸபகவான் அருளிச்செய்த சாரீரகமென்கிற ப்ரஹ்மஸூத்ரமானது, வைதிகஸமயத்தைப் பாதுகாப்பதற்கோர் அரணுப் உள்ளது: ஏனைய சாஸ்திரங்களின் உண்மையை அறிதற்குறுதுணையாந்தகைமையது. பரப்ரஹ்மத்தின் ஸ்வரூப ரூபகுணங்களை யெல்லாம், செவ்வனே வெளியிடுஞ் சிறப்பு வாய்ந்தது. இத்தகைய பெருமை சான்ற ப்ரஹ்ம ஸூத்திரத்திற்கு பகவத் ராமாநுஜாசார்யர் "ஸ்ரீபாஷ்யம்" (விரிவுரை) அருளிச் செய்தனர். பின் இந்த ஸ்ரீபாஷ்யத்தின் ஆழ்பொருளை யறிவதற்குச் சுதர்சனபட்டர் "ச்ருதப்ரகாசிகை" என்னும் ஒருரை அருளிச்செய்

தினர். இவ்விரண்டுரைகளும் ஸம்ஸ்க்ருதத்தில் பூர்ணபாண்டித்ய முடைய வர்களாலே அறியத்தக்கனவாயிருக்கின்றன. ஏனையோர் களும், இந்தப் பாஷ்யத்தின் உண்மையை யறிந்துகொள்வதற்குத் தமிழ் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாதலால் இதற்கென்றே ஒரு சங்கங்கூடி இதைத்தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமெனத் தீர்மானித்துத் திரிசிரபுரம் ஸெயிண்ட்ஜோஸப் காலேஜ் ஸம்ஸ்க்ருத தலைமைப்பண்டிதர், மஹாவித்வான், ஸாரஸ்வத ஸாரஜ்ஞர், கவிசிகாமணி, ஸ்ரீ. உ. வே. டி. வி. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமிகளால் மொழி பெயர்க்கப்பட்டு இது காறும் மூன்று சஞ்சிகைவரை அச்சிட்டுப் வெளிவந்துள்ளன மேலும் வரும்.

ஸ்ரீபாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்புச் சங்கத்தாரோடு நிர்வாக மெம்பராகச் சேர விரும்புவோர் ரூபா (100)ம் போஷக மெம்ப ராகச் சேரவிரும்புவோர் ரூபா (25)ம் கொடுக்கவேண்டும். வெளி வந்த சஞ்சிகை வாங்க விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசதாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீபாஷ்யத் தமிழ்மொழி பெயர்ப்பு முதல் சஞ்சிகை	ரூ	**1-4-0**
இரண்டாவது சஞ்சிகை	ரூ	**0—10—0**
மூன்றுவது சஞ்சிகை	ரூ	**0—12—0**

விலாசம்.

T. D. இராமஸ்வாமி நாயுடு,

திருப்புறம்பயம், P. O. கும்பகோணம்.

ஸ்ரீ:

சாத்தாத ஸ்ரீவைஷ்ணவன்.

இது, K. அழகரையரவர்களால் சேலம் செவ்வாய்ப்பேட்டையி னின்றும் மாதமொருமுறை வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. பல வகுப்பினரும் பல்லாறுகத் தம்முன்னேற்றத்தைக் குறித்து உழைத் துவருகிற இக்காலத்தில்பண்டைக்காலந்தொட்டுப்பகவத்கைங்கர்யது ரந்தரர்களாய்ச் சீருஞ் சிறப்புமுற்றுவருகிற சாத்தாதஸ்ரீவைஷ்ணவர்

களின் முன்னேற்றத்தை முன்னிட்டு ஒரு பத்திரிகை தோன்றுதல் இன்றியமையாததொன்றும். படிப்பவர்கட்கு இனிமைபயப்பத் தெள்ளியதமிழ்நடையில் சாத்தாத ஸ்ரீவைஷ்ணவகுலாசார சீர்திருத்தங்களும், ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த விஷயங்களும், நீதிகளும், பொதுவிஷய நிகழ்ச்சிகளும், பிறவும் இதில் எழுதப்படுகின்றன. இங்ஙனம் பலவிஷயங்கள் குறிப்பிடப்படுகின்றமையால் இது, சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர்களேயன்றி ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தச்சார்பினரானும், பிறரானும் போற்றப்படும் பெற்றியதே. இது நிற்க, பத்திராதிபரின் முயற்சியும், நோக்கமும் போற்றத்தக்கன. இப்பத்திரிகை மேன்மேலும் அபிவிர்த்தியடைந்து நிலையுறுமாறு ஸ்ரீய:பதியாகிய ஸர்வேசுவரன் அருள்புரிவானாக.

இதன் சந்தா விவரம்.

இராஜ போஷகர்களுக்கு	ரூ	50—0—0
போஷகர்களுக்கு	ரூ	10—0—0
அபிமானிகளுக்கு	ரூ	5—0—0
சந்தாதார்களுக்கு	ரூ	2—0—0

சாத்தாதஸ்ரீவைஷ்ணவன் ஆபீஸ்,
6, 7, முனியப்பன் கோவில் தெரு.
சேலம் செவ்வாய்ப்பேட்டை.

பாலொடுநெய் கூட்டியொரு சங்குநிறைத்துமணி
வாயினிடை காட்டிவிரல் கொண்டுதெறிக்கழுது
பாகுபடு தேக்கொடுகை டைந்துகுடித்தவுடன் முறையாலே

பாலடையை நீக்கிமுடி நின்றுசுழற்றியது
பூமிமிசை மூக்குற[1]மு னன்றுகவிழ்த்துவிரி
பாணிகொடு மீட்டுமுட லங்கமுலுக்கியிரு தொடைமேற்கொண்

டேலமுறு நீர்க்கொடு குடைந்துதுடைத்துமண
மேவுபொடி போட்டுமெய்தி மிர்ந்துநிலப்பொடியி
னேறுமொரு காப்பினிதணிந்துயர்தொட்டிலினுள் வளர்வாயென்

றேடுசெறி சேக்கையினு கந்துகிடத்திநனி
கோசலைப ராக்கறவி ருந்துவளர்க்குமபி
ராமகம லாக்ஷரகு நந்தன[2]நற்பெரிய பெருமாளே.

[குறிப்பு:— புனல்-நீர். தருக்குதல்-களிகொள்ளுதல். புயல்-மேகம். மதங்கயம்-மதத்தையுடைய யானை. படை-சேனை. கால்-காற்று. விசை-வேகம். கலம்-கப்பல். பொறை-பொறுமை. பூச்சுரன்-பூசுரன்-பிராமணன். கவி-வித்துவான். அவை-ஸபை. சீலம்-அழகு. கவி-செய்யுள். மடந்தை-பெண். நாணமறு கோற்றொடி-வெட்கம் இல்லாதபெண். கோற்றொடி-வளைந்தவளைகளையுடையாள். பொருளிலாக்குறைபிறந்த நலத்திளமை-தரித்திரனுடைய யௌவனம். கதிராளிதேசு மருவர்க்கமலம்-சூரிய காந்திபொருந்தாததாமரை. மறை-வேதம். இருதாட்டுணை-பெரிய இரண்டு திருவடிகள். தெறிக்கஅழுது என்று விரித்துக்கொள்க. பாகு-குழம்பு. தேக்கு-ஏப்பம். முடி-தலை. பாணி-கை. உலுக்கி-குலுக்கி. திமிர்ந்து-பூசி. வளர்தல்-தூங்குதல். ஏடு-பூவிதழ். செறிதல்-நிரம்புதல். சேக்கை-அணை. நனி-மிக. பராக்கற-அசட்டை நீங்க.]

---

1. மருங்குகவிழ்த்து. 2. மெய்ப்பெரிய.

17. மகபதியே தாணுவேநிதி தருமணியே மேகமேயென
மகிமைகளே கூறி[1]நீளிர வலராஞேர்

வருபொழுதே னேனெனுநகை முகமுடனே யோடிவாருமின்
மனமதுநா ணுதுகேளுமின் எனவோதித்

தகைபெறவே வீசுமேலவர் ப்ரியமொடுகா ணுது[2]வாழ்வறு
சதிரிலியாய் லோபியாய்மிடி யனுமாகித்

தளர்வுறுமா பாவியாகிய வெனையடியா ரோடுமேதகு
தலைமையினு லாளுநாளினி யொருநாளே

முகிலினைநே ரானமேனியும் வளைநிகரே ரானக்ரீவமு
முறுவலுமா வேததாலுவு மணிவாயும்

முகமுமிரா ஜீவலோசன யுகளமுநீ ணுமரேகையும்
முடிபுனையா லோலமாலையும் இருகாதும்

அகலியபூ ணாரமார்பமும் இகலியவா ஜாநுவாகுவும்
அபிநவவா ரீஜநாபியும் அரைஞாணும்

அதிவிதபா தாதிகேசமும் இளமையும்லீ லாவிநோதமும்
அழகியரா மா[3]பராபர பெருமாளே.

[குறிப்பு:— மகபதி-இந்திரன். தாணு-சிவன். நிதிதருமணி-சிந்தாமணி. இரவலர்-யாசகர். வீசுதல்-கொடுத்தல். மேலவர்-பெரியோர்களை. லோபி-உலுத்தன். மிடி-தரித்திரம். மாபாவி-மஹாபாபி. முகில்-மேகம். வளை-சங்கு. ஏர்-அழகு. க்ரீவம்-கழுத்து. முறுவல்-புன்சிறிப்பு. தாலு-நா. இராஜீவலோசனயுகளம்-(இராஜீவம்-தாமரைப்பூ. லோசனம்-கண். யுகளம்-இரண்டு.) செந்தாமரைப் பூப்போன்ற இணைக்கண்கள். நாமரேகை-திருமண்- (வரை)கோடு. புனை-தரித்த. ஆலோலமாலை-அசைகின்ற மாலை. பூண்-ஆபரணம்-ஆரம்-மாலை. இகலிய-ஒத்த. ஆஜாநுவாகு-முழந்தாள்வரைநீண்ட கை. அபிநவம்-மிகப்புதியது. வாரீசம்-தாமரை. நாபி-உந்தி. அதிவிதபாதாதிகேசமும்-அநேகவிதமான திருவடிமுதல் திருமுடியீருக உள்ள அவயவங்களும்.]

---

1. நீள்கவிவலராஞேர். 2. வாழ்வுறு. 3. சுராசுரர் பெருமாளே.

123

18. தாதைமெயனு முந்துவித் தினையொரு
தாய்வயிறெ னுந்தனிப் புலமிசை
தாழ்வறமு யன்றுவித் தியுமது பயிராகச்

சார்வினைக ளென்றுமுற் பெருகிய
நீரினைவ ளைந்துகட் டியுநெடி
தாய்மிகவ ளர்ந்துமுற் றியவழி விளைவானுற்

றாதரொடு வந்தறுத் துவலிய
பாசமது கொண்டிழுத் தொழிவறு
தூரமனை சென்றுபுக் கெரிவிழி முதுகாலன்

சோபனமு டன்புசித் திடும்வகை
யாகியபெ ரும்பிறப் பறவொளிர்
தூயபத பங்கயத் தொருதின மடைவேனோ

பாதமிசை தண்டையொப் பனைசெய்து
மேதகுச தங்கைகட் டியுமறை
பாடுமொரு கிண்கிணித் திருவரை யதுசேரப்

பாணி[1]கிரி சங்குறப் புலியுகிர்
தாழ்வடமு ரம்பொருத் தியுமிரு
பாரகுழை குண்டலப் ரபையெழ முடிமீதிற்

கோதைமலர் கொண்டைசுற் றியுநுத
லூமமொடு சிந்துரப் பொடியது
கோலியுமி லங்குசுட் டியுமதி னடுநாலக்

கூரெழின்மு கந்திருத் தியுமுடை
யாடையைவி சிந்துடுத் தியுமொரு
கோசலைய லங்கரித் திடவளர் பெருமாளே.

[குறிப்பு:— வித்து-விதை. புலம்-நிலம். வித்தியும்-விதைத்தும். காலன்-யமன். புசித்தல்-உண்ணல். பதபங்கயம்-பாததாமரை. ஒப்பனை-அலங்காரம். மேதகு-மேலானதகுதியையுடைய. மறை-வேதம். கிண்கிணித்திருவரை

[1] புரிசங்குறப்.

யெனச் சந்தநோக்கித் தகரவொற்றிரட்டித்தது. புலியுகிர்-புலிநகம். (சிறுவர்க்கு நோய் சீர்முதலியன அணுகாதிருத்தற்பொருட்டுப் புலிநகத்தை ஆபரணத்திற் சேர்த்துத்தரிப்பது பண்டைவழக்கு.) தாழ்வடம்-தாவடம்-மாலை. உரம்-மார்பு. பர்ரகுழை-பெரியகாது. ப்ரபை-ஒளி. குண்டலம்-ஒரு காதணி. கோதை-மாலை. நுதல்-நெற்றி. நாமமொடு சிந்துரப்பொடி-திருமண்காப்பும் ஸ்ரீசூர்ணமும். கோலுதல்-அமைத்தல். நால-தொங்க. விசிந்துடுத்தியும்-இருக்கிக்கட்டியும்.]

19. வேதனை முற்றும் பெருகிய
மாயவு டற்பைங் குளமிசை
வீசுவ லைத்தின் கயிறுகொ டியிராகு

மீனடை யப்புண் படவொரு
காலனி ழுக்கும் படிபடி
மீதிலு ழைக்கும் பிறவியி தமையாதோ

போதொடி ருக்கும் பரிமள
வாசமெ னப்பொன் கிளரொளி
போலுமெ னச்செஞ் சொலினுறு பொருள்போலப்

பேர்தம ணக்குந் திருவடி
மீதுக ருத்தொன் றிடவரு
பூதிப டைக்கும் பரகதி யருள்வாயே

நார்தமு றத்தண் டைகள்பல
கீதமெ ழக்கிண் கிணிமணி
நாவசை யத்தண் டுள்வள வியமாலை

நாலவு டுக்குஞ் சிறுதுகில்
சோரமி ழற்றுங் குதலைக
ணுவுத வத்தும் பிகளுற மலர்சூடுங்

கோதைநெ கச்சிந் துரநுதல்
வேர்வுத ரக்குண் டலவொளி
கூரமு கத்தின் ப்ரபையெழ மறைநாலுங்

கூடிவ ரச்செந் தளிர்நடை
கால்பத றத்தம் பியரொடு
கோசலை முத்தங் கொளவரு பெருமாளே.

[குறிப்பு:—படிமீதில்-பூமியினிடத்து. உழைக்கும்-வருந்துகின்ற. போது-புஷ்பம். போதம்-ஞானம். அநுபூதி-அநுபவம். பரகதி-மேலானபதவி. நாதம்-ஓசை. கீதம்-இசை. துளவளவியமாலை-திருத்துழாய் கலந்துதொடுத்தமாலை.]

20. ஓடுநதி சேர்மித வைபின்வருமோ
நீரைவிட வேகுமு தமுமெழுமோ
ஓடைவடி வாய்வர வரவதன்மீன் மரைபோமோ

ஊணினொடு போவது பசியலவோ
தீபவொளி தானறு நெயினளவே
போகையுறு மோவிலை மகண்மனநேர் பொருள்போனு

டிவிடு மேநிழ லவர்பிறகே
நாயகனொ டேசுப மழிவிலையோ
நாயினொடு போய்வெயில் விழவிலையோ விவைபோலே

நாளினுட னேயுயிர் செலுமினிநீ
நாளையெனி லோவச மலவுடனே
ஞானநிலை சேர்பர கதியுறுமா றருள்வாயே

நீடுமுகி லேயென துகண்மணியே
ஞானவடி வேரகு குலபதியே
நீலமலை யேதய ரதன்மகனே வெயர்வாற

நீர்கள்சொரி கோநகர் வனதரமோ
நாமமிட வோதுயில் கொளவிடவோ
நீதியிலை யாருழை கொடுசெலவோ மடிகோலி

யாடைபுனை கோவரை வடமணிகோ
கோதைசெரு கோகுழை யிணையிடுகோ
வாழிவிரன் மோதிர நிரைசெரிகோ நினைவேதென்

றூரவணை யாமுலை யமுதருளா
நேயமுறு கோசலை மடிமிசைசீ
ராடுமர சேயயன் முதலிமையோர் பெருமாளே.

[குறிப்பு:—மிதவை-தெப்பம். வடிவாய்வரவர-வற்றவற்ற. ஓடை-நீரோடை. ஓகை-விருப்பம். நாயிறு-சூரியன். வெயில்-ஒளி. முகில்-மேகம். நுகர்வன-புசிப்பவற்றை. துயில்-நித்திரை. இளையாருழை-தம்பிகளிடத்து. மடிகோலி-மடிகட்டி. ஆடை-வஸ்திரம். செருகோ-கூந்தலுள் மறைத்து முடியவோ.]

21. தொந்தி சரிய் மயிரே வெளிறநிரை
தந்த மசைய வுடல்போய் வளையவுடை
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் நகையாடித்

தொண்டு கிழவ னிவனு ரெனவிருமல்
கிண்கி ணெனுமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி

வந்த பிணியு மதிலே மிடியுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுகு துயர்தானும்

மங்கை யழுது விழுமோ சையுநமனு
நின்று சருவ மனமே சிதறவுயிர்
மங்கு பொழுது கடிதே கருடன்மிசை வரவேணும்.

எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
வென்கண் வருக வெனதா ருயிர்வருக வபிராமா

இங்கு வருக வரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டுகவருக
வென்று பரிவி னொடுகோ சலைபணுகி விளிபோது

சிந்தை யிளக வரைஞா ணொடுகிழவளர்
குஞ்சி யலைய நுதல்வேர் வசையவிரு
செங்கை மருவு கிரிதாழ் வடமசைய மணிவாய்நீர்

சிந்தி யொழுக நகையே பெருகவொரு
தம்பி தொடர முதிரா நடையொடவள்
செம்பொன் மடியி லினிதே றிய[1]கரிய பெருமாளே.

---

[1]பரமபெருமாளே.

[குறிப்பு:— தொந்தி-வயிறு. வெளிற-வெண்மைநிறமடைய. நிரைதந்தம்-வரிசையாயமைந்தபற்கள். நகையாடி-சிறித்து, உரை-பேச்சு. துஞ்சு குருடு-உறக்கத்திலுள்ள பார்வையற்றநிலே. பிணி-நோய். மிடி-வறுமை. பண்டிதன்-வித்வான். மெய்-சரீரம். உடைமை-சொத்து. கடன்-பிறர்க்குத்தரவேண்டியது. முடுகுதுயர்-எதிர்த்துவருகின்றதுயர். நமன்-யமன். சருவ-கிட்ட. கடிதே-சீக்ரமாக. பரிவு-அன்பு. விளிபோதில்-கூப்பிடும்பொழுது. குஞ்சி-சிகை.]

22. [1]கதிர்த்தகுடைக்கீழ் முற்படு தண்டிகை
யெடுத்ததலைப்பா ரக்கரி யின்சிறு
கழுத்திலிருப்பார் கத்திகை யின்புற மசைவார்தங்

கனத்தபொருட்போய் மெத்தமு றிந்துத
முடைத்துகிலற்றே வட்டக ருந்துணி
[2]கசக்கியுடுத்தே வெட்குதல் [3]கிஞ்சிது மிலராகிப்

பதைத்துநடுக்கா மற்றொர்பு றங்கடை
மிதித்திடர்பட்டே [4]யச்சமு ளங்கொடு
பசித்தனமப்பா பிச்சையி டென்றுயிர் தடுமாறிப்

பதைப்பர்தவித்தே நிற்பது கண்டுமோர்
நிலைப்பரிவுற்றே கெட்டம னம்பெறு
பணத்தைமகத்தா கக்கரு துந்துய ரொழியாதோ

இதத்தொடுசுற்ற நத்திடு தம்பியர்
நிழற்சுவடொத்தே நட்பின ணைந்திட
வெடுத்து வளர்த்தே நற்சவு ளங்களொ டுபவிதம்

எனைத்துமியற்று வற்பகல் சந்தத
நிலைப்பிரிவற்றே கைக்கொடு முந்திய
வியற்கைமனுப்போல் கொற்றவ னின்புற வளர்நாளின்

மதிக்குவிளக்காய் மிக்ககு ணங்களொ
டுயிர்க்குயிரொத்தே யுட்புற மெங்கணு
மயக்கறவுற்றே முற்றுமு ணர்ந்தும [5]துணரார்போன்

---

[1]கதித்த. [2]கடுக்கி. [3]கிஞ்சமு. [4]பொக்கணமுங்கொடு. [5]துணராய்போன்.

மறைப்பொருள்விக்ஞா னத்தடை வென்பது
[6]படைத்திடுசொற்கீ தத்தொட டங்கலும்
வசிட்டரிடத்தே கற்றுவி ளங்கிய பெருமாளே.

[குறிப்பு:— கதிர்த்த-விளங்குகின்ற. தண்டிகை-சிவிகை. பாரக்கரி-பெரியயானை. கத்திகை-மாலை. புறம்-மெய். துகில்-உடை. கிஞ்சிதும்-சிறிதும். புறங்கடை-தலைவாசல். மகத்து-பெரிது. நத்திடு-விரும்புகின்ற. சுவடு-அடையாளம். சவுளம்-குடுமிவைத்தல். உபவீதம்-பூணூற்சடங்கு. எனைத்தும்-எல்லாம். இயற்று-செய்து. அற்பகல்-இரவும்பகலும். சந்ததம்-எப்பொழுதும். கொற்றவன்-அரசன்-தசரதன். (சந்தநோக்கி, வட்டக்கருந்துணியென்பது ஒற்றின்றி 'வட்டகருந்துணி' என வந்தது. 'பதைத்துநடுங்கா' என்றிருக்கவேண்டியது சந்தநோக்கிப் 'பதைத்துநடுக்கா' என நின்றது வலித்தல்விகாரம்.]

23. மாலைகுந்தள பந்திபுனைந்துபொன்
ஞேலையின்குழை யின்கணணிந்தெதிர்
வாடுகின்றம ருங்கி[1]ன றுங்கலை யதுசேர

வாண்முகம்ப்ரபை கொண்டொளிர்சிந்துர
ரேகைமுந்தவ ரைந்துதனங்களின்
வாசகுங்கும சந்தகிலிங்கித மொடுபூசி

மேலிலங்குக ரும்புநறுங்கொடி
தோளழுந்துந லஞ்செய்துமென்பத
மீதுதண்டைசி லம்புசெறிந்தினி [2]நுமராயம்

மேவுநன்பதி யிங்கணிதென்றிறை
சோலையின்கண கன்றிடலென்றுவிர்
தாவில்வஞ்சகர் முன்சொலியென்றமிழ் கெடலாமோ

நீலமஞ்சுவி ளங்கியபங்கய
மானகண்கைமு கஞ்சரணங்கொடு
நீணிலந்தனில் வந்துபுகுந்தென வழகாகி

நேசமும்பரி வும்பெறுதம்பியர்
மூவரும்புடை நின்றுமகிழ்ந்திட
நேரின்மங்கையர் சிந்தைசெழுங்கனன் மெழுகாகக்

---

[6]படித்திடு.